# AADHITHYA UG TET- TRB COACHING CENTRE – KANCHEEPURAM

## UG-TRB – 2023-2024

## பட்டதாரி ஆசிரியர் நியமனத் தேர்வு - 2023 – 2024

## மாதிரி தேர்வு - தமிழ்

31.12.2023

| | | |
|---|---|---|
| 1. வினா தொகுப்பில் உள்ள பக்கங்களில் எண்ணிக்கை : No of Pages in Questions Booklet : | Questions Booklet Series | Questions Booklet Serial No |
| 2. தேர்வு எண் தேர்வு (அனுமதி சீட்டில் உள்ளவாறு) Roll No. As in Hall Ticket : | | |
| 3. OMR விடைத்தாள் எண் விண்ணப்பதாரரே நிரப்பவேண்டும் Canditate Name as given in Application | | |
| 4. விண்ணப்பதாரரின் பெயர் Candidates Name As Given in Application | | |
| 5. விண்ணப்பதாரரின் கையொப்பம் Candidates Signature | | |
| 6. கண்காணிப்பாளரின் கையொப்பம் Invigilator Signature | | |

இந்த வினாத்தாளில் 180 கொள்குறி வகை வினாக்கள் உள்ளன , இந்த வினாத் தொகுப்பானது இரு பகுதிகளை கொண்டது. பகுதி அ - வில் 30 வினாக்கள் உள்ளன. வினா எண் 1 முதல் 20 வரை இரண்டு மதிப்பெண் வினாக்களும் 21 முதல் 30 வரை ஒரு மதிப்பெண் வினாக்களைக் கொண்டுள்ளது. பகுதி ஆ150 ஒரு மதிப்பெண் வினாக்களைக் கொண்டுள்ளது . விண்ணப்பதாரர் அனைத்து வினாக்களுக்கும் விடை அளிக்க வேண்டும். தவறான விடைகளுக்கு மதிப்பெண் குறைக்கப்பட மாட்டாது

This booklet contains 180 multiple choice questions , booklet in made up the 2 parts . Part “A” contains 30 questions ( Q No 1 to 30 ) Q.No 1 to - 20 is of 2 marks Question No 21 to 30 is of 1 mark each. Part “B” contains 150 question ( Q No 31 to 180 ) Each question is of 1 mark . There is No Negative marking for Wrong Answer

அரசாணை எண் ( Ms ) எண் ( 49 ), மனித வளம் ( M ) துறை நாள் ( 23.05.2022 )–ன் படி மாற்றுத் திறனாளிகள் கட்டாய தமிழ் தேர்விலிருந்து விலகளிக்கப்பட்டுள்ளனர்

As G. O ( Ms ) No 49, Human Resource ( M ) Depaprtment date 23.05.2022 Differently Abled Candidate are

| | | |
|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட நேரம் | பொது தேர்வாளர்கள் | 210 நிமிடங்கள் |
| | மாற்றுத் திறனாளி தேர்வாளர்கள் | 240 நிமிடங்கள் |
| Alloted Time | Generaral Candidate | 210 minutes |
| | Differently Abled Candidate | 240 minutes |

AADHITHYA TRB KANCHIPURAM. 9786851468,

Scanned with OKEN Scanner

# AADHITHYA UG TET- TRB COACHING CENTRE – KANCHEEPURAM
## UG-TRB – 2023-2024
## பட்டதாரி ஆசிரியர் நியமனத் தேர்வு - 2023 – 2024
## மாதிரி தேர்வு - தமிழ்

# பகுதி - அ

1. மாலதி மாலையைத் தொடுத்தாள் - இது எவ்வகை வாக்கியம்?
   அ) செய் வினை ஆ) செயப்பாட்டு வினை
   இ) தன் வினை ஈ) பிறவினை

2. இலக்கணக் குறிப்பறிதல் - சாலச் சிறந்தது - தொடரின் வகையை அறிக
   அ) இடைச்சொல் தொடர் ஆ) விளித் தொடர்
   இ) எழுவாய்த் தொடர் ஈ) உரிச்சொல் தொடர்

3. பெயர்ச் சொற்களைப் பொருத்துக

| | | | | | அ) | ஆ) | இ) | ஈ) |
|---|---|---|---|---|---|---|---|---|
| அ) | மல்லிகை | 1. | சினைப் பெயர் | அ) | 4 | 3 | 1 | 2 |
| ஆ) | பள்ளி | 2. | பண்புப் பெயர் | ஆ) | 3 | 4 | 2 | 1 |
| இ) | கிளை | 3. | இடப் பெயர் | இ) | 4 | 3 | 2 | 1 |
| ஈ) | இனிமை | 4. | பொருள் பெயர் | ஈ) | 2 | 3 | 1 | 4 |

4. பொருத்த மற்ற பெயர்ச் சொற்களை எடுத்து எழுதுக
   அ) காலப் பெயர் - செம்மை
   ஆ) சினைப் பெயர் - கண்
   இ) பண்புப் பெயர் - ஆண்டு
   ஈ) தொழிற் பெயர் - ஆடுதல்
   அ) அ இ
   ஆ) அ ஆ
   இ) இ ஈ
   ஈ) அ ஈ

5. மரபு பிழைகள்அற்ற தொடரைக் குறிப்பிடுக
   அ) கூகை கூவும் ஆ) கூகை குனுகும்
   இ) கூகை குழறும் ஈ) கூகை அலறும்

6. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக
   அ) மோனை ஆ) எதுகை
   இ)) இசைவு ஈ) இயைபு

7. பொருத்துக

| | | | | | அ) | ஆ) | இ) | ஈ) |
|---|---|---|---|---|---|---|---|---|
| அ) | சோறு | 1. | குடித்தான் | அ) | 4 | 3 | 1 | 2 |
| ஆ) | பால் | 2. | உண்டான் | ஆ) | 3 | 4 | 2 | 1 |
| இ) | பழம் | 3. | பறுகினான் | இ) | 2 | 3 | 4 | 1 |
| ஈ) | நீர் | 4. | தின்றான் | ஈ) | 2 | 3 | 1 | 4 |



Scanned with OKEN Scanner
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

8. "உழவர் பாட்டு" என்று அழைக்கப்படும் நாட்டுப்புறப்பாட்டு
அ) தாலாட்டுப் பாட்டு ஆ) கும்மிப் பாட்டு
இ)) பள்ளுப்பாட்டு ஈ) வில்லுப்பாட்டு

9. " "யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்"என்று புகழ்ந்து கூறியவர் யார்?
அ) வாணிதாசன் ஆ) பாரதிதாசன்
இ)) சுரதா ஈ) பாரதியார்

10. பண்டைய காலத்துத் துறைமுக நகரங்கள் பற்றி கூறும் நூல்
அ) பட்டினப்பாலை ஆ) தொல்காப்பியம்
இ)) குறிஞ்சிப்பாட்டு ஈ) திருக்குறள்

11. தமிழ்ச் செய்யுள் கலம்பகம் என்னும் நூலை எழுதியவர்
அ) வீரமாமுனிவர் ஆ) கால்டுவெல்
இ) ஜி.யு.போப் ஈ) தேவதேயப்பாவாணர்

12. மோனைத் தொடை ,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,வகைப்படும்
அ) ஆறு ஆ) எட்டு
இ) ஐந்து ஈ) மூன்று

13. சரியான இணைகளைத் தேர்ந்தெடு
அ) பகுத்தறிவுக் கவிராயர் - உடுமலை நாராயணக்கவி
ஆ) உவமைக் கவிஞர் - பெருஞ்சித்தனார்
இ) காந்தியக் கவி'ஞர் - வெ. இராமலிங்கனார்
ஈ) புரட்சிக் கவிஞர் - தாரா. பாரதி
அ) அ மற்றும் ஆ சரி
ஆ) ஆ மற்றும் இ சரி
இ) அ மற்றும் இ சரி
ஈ) ஆ மற்றும் ஈ சரி

14. விடைக்கேற்ற வினாவைத்த தேர்ந்தெடுக்க
ஐந்து மாடுகள் மேய்ந்தன
அ) எத்தனை மாடுகள் மேய்ந்தன?
ஆ) எவ்வளவு மாடுகள் மேய்ந்தன?
இ) மாடுகள் மேய்ந்தனவா?
ஈ) ஐந்து மாடுகள் என்ன செய்கின்றன?

15. "தேடு " - வினைமுற்று சொல்
அ) தேடிய ஆ) தேடி
இ) தேடினார் ஈ) தேடுதல்

16. கலம்பகம் - இச்சொல்லைப் பிரித்து எழுதுக
அ) கலம் + அகம் ஆ) கலம் + பகம்
இ) கலம்பு + அகம் ஈ) கல் + அம்பகம்



Scanned with OKEN Scanner

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

17. பொருத்துக

| | | | | | அ) | ஆ) | இ) | ஈ) |
|---|---|---|---|---|---|---|---|---|
| அ) | வெண்பா | 1. | துள்ளல் ஓசை | அ) | 4 | 3 | 1 | 2 |
| ஆ) | ஆசிரியப்பா | 2. | தூங்கல் ஓசை | ஆ) | 3 | 4 | 2 | 1 |
| இ) | கலிப்பா | 3. | செப்பல் ஓசை | இ) | 2 | 3 | 4 | 1 |
| ஈ) | வஞ்சிப்பா | 4. | அகவல் ஓசை | ஈ) | 3 | 4 | 1 | 2 |

18. அடைமொழியால் குறிக்கப்பெறும் நூல் எது?

அ) நெடுந்தொகை ஆ) திருக்குறள்
இ) முத்தொள்ளாயிரம ஈ) கம்பராமாயணம்

19. உழவர் உழத்தியரது வாழ்க்கையில் நிகழும் நிகழ்ச்சிகளை எளிய நடையில் வெளிப்படுத்தும் சிற்றிலக்கிய வகை எது?

அ) கலம்பகம் ஆ) பள்ளு
இ) குறவஞ்சி ஈ) உலா

20. மூன்றடிச் சிற்றெல்லையும் ஆறடிப் பேரெல்லையும் கொண்ட அகவற்பாக்களால் ஆன நூல் எது?

அ) குறுந்தொகை ஆ) ஐங்குறுநூறு
இ) அகநானூறு ஈ)) நற்றிணை

21. பொருத்தமான விடையைத் தருக

| | | | | | அ) | ஆ) | இ) | ஈ) |
|---|---|---|---|---|---|---|---|---|
| அ) | சிறுபஞ்ச மூலம் | 1. | காப்பிய இலக்கியம் | அ) | 3 | 4 | 1 | 2 |
| ஆ) | குடும்ப விளக்கு | 2. | சங்க இலக்கியம் | ஆ) | 3 | 4 | 2 | 1 |
| இ) | சீவகசிந்தாமணி | 3. | அற இலக்கியம் | இ) | 2 | 3 | 4 | 1 |
| ஈ) | குறுந்தொகை | 4. | தற்கால இலக்கியம் | ஈ) | 3 | 4 | 2 | 1 |

22. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஆகிய இரண்டு தொகுதிகளையும் அச்சிட்டு அளித்தவர்

அ) மெய்யப்பர் ஆ) இலக்குவனார்
இ) மீனாட்சி சுந்தரனார் ஈ)) உ.வே.சாமிநாத ஐயர்

23. முதல் எழுத்துக்கள் மட்டும் இடம்பெறும் சொல் எது?

அ) சுரி ஆ) குருவி
இ) கிளி ஈ) ஆம்

24. கீழ்கண்டவற்றுள் காதில் அணியும்அணிகலன் எது?

அ) குழை ஆ) சுட்டி
இ) சிலம்பு ஈ) கிண்கிணி

25. வாக்கியம் 1: கல்வியும் செல்வமும் பெற்ற பெண்கள் விருந்தும் ஈகையும் செய்வதாகக் கூறியவர் - கம்பர்

வாக்கியம் 2: விருந்தினர்க்கு உணவிடுவோரின் முகமலர்ச்சியை உவமையாக்கியவர் - இளங்கோவடிகள்

அ) அ மட்டும் சரி ஆ) ஆ மட்டும் சரி
இ) அ மற்றும் ஆ சரி ஈ) அ மற்றும் ஆ இரண்டுமே தவறு



Scanned with OKEN Scanner
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

26. "முதற்கருவி" என்ற பெயரில் அழைக்கப்படும் இசைக்கருவி எது?
அ) மத்தளம் ஆ) சங்கு
இ) கொம்பு ஈ) பறை

27. "மழை சடசடவெனப் பெய்தது - இத்தொடரில் அமைந்துள்ளது
அ) அடுக்குத் தொடர் ஆ) இரட்டைக் கிளவி
இ) தொழிலாகு பெயர் ஈ) பண்பாகு பெயர்

28. பொருத்தமான விடையைத் தருக

| | | | | | அ) | ஆ) | இ) | ஈ |
|---|---|---|---|---|---|---|---|---|
| அ) | தனித்தமிழ் இயக்கம் | 1. | நா.பார்த்தசாரதி | அ) | 3 | 4 | 1 | 2 |
| ஆ) | குறிஞ்சி மலர் | 2. | வ.ராமசாமி | ஆ) | 3 | 4 | 2 | 1 |
| இ) | மழையும் புயலும் | 3. | இரா.பி.சேதுபிள்ளை | இ) | 2 | 3 | 4 | 1 |
| ஈ) | தமிழின்பம் | 4. | இரா.இளங்குமரனார் | ஈ) | 4 | 1 | 2 | 3 |

29. மேல் இதழும் கீழ் இதழும் பொருந்துவதால் பிறக்கும் மெய்யெழுத்துக்கள் எவை?
அ) ர், ழ் ஆ) ப், ம்
இ) த், ந் ஈ) ட், ண்

30. மூன்று புள்ளிகளையுடைய தனித்த வடிவம் பெற்ற சொல் எது?
அ) குற்றியலுகரம் ஆ) உயிரளபெடை
இ) அ:.கேனம் ஈ) உயிர்மெய்

# பகுதி - ஆ

31. கவிதைக் கிரீடம் என்று அழைக்கப்படும் நூல் எது ?
அ) பெத்தலக குறவஞ்சி ஆ) திருக்குற்றாலக் குறவஞ்சி
இ) தமிழரசி குறவஞ்சி ஈ) அனைத்தும்

32. பொருத்துக
அ) பிள்ளைத்தெளிவு — 1. கரந்தை மறவனின் ஆண்மை
ஆ) பிள்ளையாட்டு — 2. தண்ணளி செய்தல்
இ) பிள்ளைப் பெயர்ச்சி — 3. விழிப்புண்ணைப் பார்த்து மகிழ்தல்
ஈ) ஆளெறி பிள்ளை — 4. பகைவனின் குடலை வேலில் சுற்றி ஆடுதல்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 1 | 3 | 2 | 4 |
| ஆ) | 3 | 4 | 2 | 1 |
| இ) | 3 | 4 | 1 | 2 |
| ஈ) | 4 | 3 | 2 | 1 |

33. அன்றே + என்னின் இடம்பெறும் உடம்படு மெய் எது ?
அ) ய் ஆ) வ்
இ) ய், வ் ஈ) ஏ



Scanned with OKEN Scanner
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

34. பொருத்தமற்றதைத் தேர்வு செய்க
அ) காதுகள் ஆ) சேரமான் காதலி
இ) சமுதாய வீதி ஈ) கள்வனின் காதலி

35. 'பொய்க் கால்' என்ற நூலின் ஆசிரியர் யார் ?
அ) அறிவுமதி ஆ) கவிஞர் வாலி
இ) நா. முத்துக்குமார் ஈ) தேவதேவன்

36. 'ஊர்வலம்' என்ற இதழை நடத்தியவர் யார்?
அ) நாமக்கல் கவிஞர் ஆ) திரு. வி . கா
இ) சுரதா ஈ) முடியரசன்

37. கூற்று – 1 : கால்வாய் இல்லாத இடத்தில் பெய்த ஒளி மழையே கவிதை எனக் கூறியவர் கீட்ஸ்
கூற்று – 2 : தமிழ் மறுமலர்ச்சிக் காலம் 18 ஆம் நூற்றாண்டு
அ) இரண்டும் தவறு ஆ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
இ) இரண்டும் சரி ஈ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி,

38. பல்வகை உயிர்களின் பரிணாம வளர்ச்சியைக் கூறும் நூல் எது ?
அ) திருக்குறள் ஆ) தேவாரம்
இ) திருவாசகம் ஈ) திவ்ய பிரபந்தம்

39. கூற்று : கால்டுவெல் திராவிட மொழிகளில் அடிப்படையான மொழி தெலுங்கு எனக் கூறியுள்ளார்
காரணம் : மலையாளத் தமிழ் ஏழாம் நூற்றாண்டு வரை ஒன்றாகவே இருந்தது
அ) இரண்டும் சரி ஆ) கூற்று சரி, காரணம் தவறு
இ) கூற்று தவறு, காரணம் சரி, ஈ) கூற்று, காரணம் இரண்டும் தவறு

40. மனைவியைத் தீண்டாத நாயனார் யார் ?
அ) திரு நீலகண்ட நாயனார் ஆ) ஏனாதி நாயனார்
இ) கணம்புல்லவர் ஈ) கணநாய நாயனார்

41. " இரு நில மடந்தை யீன்ற திருவீசும் பெண்ணும் கைத்தாய் " என இடம் பெறும் நூல் எது ?
அ) குண்டலகேசி ஆ) மணிமேகலை
இ) சீவக சிந்தாமணி ஈ) கம்பராமாயணம்

42. செய்வித்தோனால் பெயர் பெற்ற நூல் எது ?
அ) வீர சோழியம் ஆ) மூவருலா
இ) நன்னூல் ஈ) அனைத்தும்

43. "கண்ணகி" பற்றிய குறிப்பு இடம்பெறும் நூல் எது ?
அ) நற்றிணை ஆ) குறுந்தொகை
இ) ஐங்குறுநூறு ஈ) அகநானூறு



Scanned with OKEN Scanner
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

44. நாயன்மார்களில் அமர்ந்த கோலத்தில் இடம்பெற்ற நாயன்மார் யார் ?
அ) சேரமான் பெருமாள் நாயனார் ஆ) காரைக்கால் அம்மையார்
இ) திருஞானசம்பந்தர் ஈ) திருமூலர்

45. "அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை" என்ற பாடல் முதலில் இடம் பெற்றது.
அ) திருவம்பாவை ஆ) ராமலிங்க அடிகளார் பாடிய பாடல்கள்
இ) திருவாசகம் ஈ) பட்டினத்தார் பாடல்கள்

46. "இறுமுகம்" என்று அழைக்கப்படும் சிற்றிலக்கியம்
அ) அருந்தாதி ஆ) கலம்பகம்
இ) மாலை ஈ) பிள்ளைத் தமிழ்

47. "பிட்டுத் திருவிழா" நடைபெறும் இடம் எது ?
அ) திருவலங்காடு ஆ) மதுரை
இ) சீர்காழி ஈ) திருவானைக்கா

48. பொருத்தமானதைத் தேர்வு செய்க
அ) 14 நரம்பு - பேரியாழ் ஆ) 19 நரம்பு - ஆதியாழ்
இ) 19 நரம்பு - மகர யாழ் ஈ) 14 நரம்பு - மகர யாழ்

49. தொல்காப்பியக் கடலை அளக்கும் படகு
அ) சேனாவரையம் ஆ) நேமி நாதம்
இ) இளம்பூரணம் ஈ) பிரயோக விவேகம்

50. 'எனது போராட்டம்' நூலின் ஆசிரியர் யார் ?
அ) மு.வா ஆ) மா பொ சி
இ) வ ர ஈ) வ சுப

51. ராமானுஜரின் நூல்களுல் இல்லாத நூல் எது ?
அ) வேதாந்த தீபம் ஆ) ஸ்ரீ பாஷ்யம்
இ) வேதாந்த சாரம் ஈ) வேதாந்த தீபிகை

52. கோமல் சுவாமிநாதனின் முதல் நாடகம் எது ?
அ) புதிய பாதை ஆ) ராஜ பரம்பரை
இ) தண்ணீர் தண்ணீர் ஈ) பெருமானே சாட்சி

53. '<u>நிழலே</u> யனியத னயலது <u>கடலே</u>' இதில் இடம் பெறும் இயைபு
அ) பொழிப்பு இயைபு ஆ) இணை இயைபு
இ) ஒரூஉ இயைபு ஈ) கூழை இயைபு

54. இடைப் பகாப்பதத்துக்குரிய சொல்
அ) கடி ஆ) உறு
இ) நனி ஈ) போல



Scanned with OKEN Scanner
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

55. ஒலியியலை எத்தனை வகையாகப் பிரிக்கலாம் ?
அ) இரண்டு ஆ) மூன்று
இ) நான்கு ஈ) ஐந்து

56. "பதிப்புத் தலைமகன்" என்று அழைக்கப்படுபவர் யார் ?
அ) உ.வே.சா ஆ) ஆறுமுகநாவலர்
இ) சி வை தாமோதரன் பிள்ளை ஈ) கல்லாடம்

57. குசிகர் கதைகளை இயற்றியவர் யார் ?
அ) மாதவையா ஆ) உ வே ச ஐயர்
இ) தாகூர் ஈ) ருக்மணி

58. மணிப் பிரவாள நடையில் அமைந்த நூல்
அ) ஸ்ரீ விவிலியம் ஆ) சீவக சிந்தாமணி
இ) கத்திய சிந்தாமணி ஈ) அனைத்தும்

59. " வா வாத்தியாரே வூட்டாண்ட " என்ற பாடலை எழுதியவர்
அ) மனோகர் ஆ) சோ
இ) பம்மல் சம்பந்த முதலியார் ஈ) தி . க சண்முகம்

60. நாட்டுப்புற புறவியலின் தந்தை
அ) ஜேக்கப் கரீம் ஆ) நா. வாமனமாமலை
இ) சு. சக்திவேல் ஈ) கைலாசபதி

61. நாவல் இலக்கிய தோற்றமும் வளர்ச்சியும் என்ற நூலின் ஆசிரியர் யார் ?
அ) வல்லிக்கண்ணன் ஆ) சிட்டி சிவப்பாத சுந்தரம்
இ) கா. சிவத்தம்பி ஈ) க. நா சுப்பிரமணியம்

62. திராவிட மொழிகளில் வடமொழி தாக்கம் குறைவாகக் காணப்படும் மொழி எது ?
அ) தெலுங்கு ஆ) மலையாளம்
இ) தமிழ் ஈ) கன்னடம்

63. தென்னிய மொழிகளை "நிஷதமொழிகள்" என்றழைத்தவர் யார் ?
அ) கிரியர்பென் ஆ) மாக்ஸ்முல்லர்
இ) சீகன் பால்கு ஐயர் ஈ) பர்ரோ

64. மகேந்திரவர்மன் நாடக நூலை எழுதினான் எனக் கூறும் கல்வெட்டு?
அ) சின்னமனூர்க் கல்வெட்டு ஆ) உத்திரமேரூர் கல்வெட்டு
இ) மண்டகப்பட்டுக் கல்வெட்டு ஈ) பிராமிக் கல்வெட்டு

65. ' தமிழன் ' என்ற சொல் யாருடைய தேவாரப் பாடலில் இடம்பெற்றுள்ளது ?
அ) திருஞானசம்பந்தர் ஆ) திருநாவுக்கரசர்
இ) சுந்தரர் ஈ) அனைவரும்

66. பொருத்தமற்றதைத் தேர்வு செய்க
அ) அட்டவணை ஆ) சாம்பார்
இ) ரவிக்கை ஈ) வெள்ளம்



Scanned with OKEN Scanner

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

67. "அற்றைத் திங்கள் அவ் வெண் நிலவில்
எந்தையும் உடையோம் எம் குன்றும் பிறர் கொளள்
என்ற அடிகளில் உணர்த்தப்படும் மன்னன்…

அ) கபிலர் ஆ) காரி
இ) அதியன் ஈ) பாரி

68. ஜெயகாந்தன் ஞானபீட விருது பெற்ற ஆண்டு
அ) 2001 ஆ) 2002
இ) 2003 ஈ) 2004

69. "இராமசரிதம்" எம் மொழி நூல்
அ) மலையாளம் ஆ) வடமொழி
இ) தமிழ் ஈ) கன்னடம்

70. பொருத்துக
அ) முதல் வீடு - 1. திருச்சீரலவாய்
ஆ) இரண்டாம் வீடு - 2. திருவாவினன்குடி
இ) மூன்றாம் வீடு - 3. திருவேரகம்
ஈ) மூன்றாம் வீடு - 4. திருப்பரங்குன்றம்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 4 | 1 | 2 | 3 |
| ஆ) | 3 | 4 | 2 | 1 |
| இ) | 3 | 4 | 1 | 2 |
| ஈ) | 4 | 3 | 2 | 1 |

71. 'திருஞானசம்பந்தர் பதிற்றுப்பந்தாதி' நூலை எழுதியது யார்
அ) இரராசையா கவிஞர் ஆ) சேரப்பெருமாள் கவிராயர்
இ) நம்பியாண்டார் நம்பி ஈ) மீனாட்சி சுந்தரம்பிள்ளை

72. "மாசறு பொன்னே ! வலம்புரி முத்தே" எனப் பாராட்டப்படுபவர் யார்
அ) சீதை ஆ) பதுமை
இ) மணிமேகலை ஈ) கண்ணகி

73. பொருத்தமானது தேர்வு செய்க
அ) மீரா - ஊசிகள்
ஆ) தேவ தேவன் - நட்சத்திர மீன்
இ) கல்யாண்ஜி - நிலாப் பூ
ஈ) சிற்பி பாலசுப்ரமணியன் - அணிச்சு
அ) அ, ஆ பொருத்தம் ஆ) அ , இ பொருத்தம்
இ) ஆ, ஈ பொருத்தம் ஈ) அ, ஈ பொருத்தம்

74. "புவியை நடத்துப் பொதுவில் நடத்து" எனப் பாடியவர் யார்
அ) பாரதிதாசன் ஆ) வாணிதாசன்
இ) கண்ணதாசன் ஈ) சுரதா

75. தொ மு சிக்குப் பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க
அ) திருச்சிற்றம்பல கவிராயர் ஆ) பஞ்சும் பஞ்சும் பசியும்
இ) வாயில் திறருக்கட்டும் ஈ) பாரதி காலமும் கருத்தும்



Scanned with OKEN Scanner
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

76. கூற்று - 1 : களப்பிரர்களின் சமயம் ஆசிகவமாகும்
கூற்று - 2 : ஆங்கிலத்தில் தமிழ் இலக்கிய வரலாற்றை முதலில் எழுதியவர் - பூர்ணலிங்கம் பிள்ளை
அ) கூற்று - 1 கூற்று - 2 இரண்டும் சரி
ஆ) கூற்று - 1 சரி, கூற்று - 2 தவறு
இ) கூற்று - 1 தவறு, கூற்று - 2 சரி.
ஈ) கூற்று - 1 கூற்று - 2 இரண்டும் தவறு
அ) இரண்டும் சரி
ஆ) இரண்டும் தவறு
இ) கூற்று 1 தவறு கூற்று 2 சரி
ஈ) கூற்று 1 சரி கூற்று 2 தவறு

77. சேரதாண்டவம் என்ற நூலை எழுதியவர் யார்
அ) பாரதிதாசன்
ஆ) நாமக்கல் கவிஞர்
இ) சுரதா
ஈ) கவிராயர்

78. பொருத்துக
அ) உலகெலாம் உணர்ந்து — 1. கம்பராமாயணம்
ஆ) உலகம் யாவையும் — 2. பெரியபுராணம்
இ) உலகம் உவப்ப — 3. நெடுநல்வாடை
ஈ) வையகம் பனிப்ப — 4. திருமுருகாற்றுப்படை

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 4 | 1 | 2 | 3 |
| ஆ) | 2 | 1 | 4 | 3 |
| இ) | 3 | 4 | 1 | 2 |
| ஈ) | 4 | 3 | 2 | 1 |

79. தவறான கூற்றைத் தேர்வு செய்க
அ) பாரதியார் கவிதைகள் முதல் முதலில் நாட்டு உடைமையாகப்பட்டன
ஆ) தேனொழுக்க கவிபாடுபவர் - கவிமணி
இ) வாணிதாசன் பாடல்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது
ஈ) கண்ணீர்ப் பூக்கள் எழுதியவர் - சீ . மணி

80. "FALK LORE" - என்பது
அ) தொன்மம்
ஆ) படிமம்
இ) நாட்டுப்புற பாடல்கள்
ஈ) கவிராயர்

81. கீழ்க்கண்டவற்றுள் ' ஞானதீபம் ' என்று யாருடைய பாடல்கள் அழைக்கப்படுகின்றன
அ) பூதத்தாழ்வார்
ஆ) பொய்கையாழ்வார்
இ) பேயாழ்வார்
ஈ) அனைவரும்

82. பின்வரும் நிலையணி எத்தனை வகையில் வரும்
அ) 03
ஆ) 04
இ) 02
ஈ) 05

83. இலக்கண நூலை எழுதி உரையும் செய்த நூல் எது
அ) வீரசோழியம்
ஆ) சுவாமிநாதம்
இ) புறப்பொருள் வெண்பாமாலை
ஈ) அனைவரும்



Scanned with OKEN Scanner
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

84. சார்பு நூல் எது ?
அ) வீரசோழியம் ஆ) பிரத்தியோக விவேகம்
இ) இலக்கணக் கொத்து ஈ) இலக்கண விளக்கம்

85. தூதுவிடும் பொருட்களுள் ஒன்று
அ) கொக்கு ஆ) எகினம்
இ) தோழன் ஈ) பருந்து

86. வள்ளுவர் கூறும் தலையாயச் செல்வம் எது ?
அ) பொருட்செல்வம் ஆ) அறிவுச்செல்வம்
இ) கேள்விச்செல்வம் ஈ) அனைத்தும்

87. நல்லாந்துவனரால் தொகுக்கப்பட்ட நூல்
அ) பரிபாடல் ஆ) கலித்தொகை
இ) அகநானூறு ஈ) நற்றிணை

88. "காஞ்சிபுராணம்" எழுதியவர் யார்
அ) உமாபதி சிவாச்சாரியார் ஆ) அதிவீர ராம பாண்டியன்
இ) குமரகுருபரர் ஈ) கச்சியப்ப முனிவர்

89. நளனைப் பற்றி கூறும் நூல்களுல் ஒன்று
அ) நைடதம் ஆ) வெற்றி வேற்கை
இ) நீதிநெறி விளக்கம் ஈ) இராமாயணம்

90. " சைவ சித்தாந்தம் " என்ற சொல் இடம்பெறும் நூல்
அ) திருவாசகம் ஆ) திருமந்திரம்
இ) சிவாச்சாரியார் பாடல்கள் ஈ) பட்டணத்தார் பாடல்கள்

91. "தமிழோடு இசை பாட மறந்தறியேன் தேன் " எனப் பாடியவர்
அ) திருஞானசம்பந்தர் ஆ) சுந்தரர்
இ) திருநாவுக்கரசர் ஈ) மாணிக்கவாசகர்

92. சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல்
அ) வேலும் வில்லும் ஆ) தமிழ் இன்பம்
இ) திருவள்ளுவர் நூல் ஈ) நயம் ஊரும் பேரும்

93. 'தமிழன் ' என்ற சொல்லிருந்து தான் ' திராவிடம் ' என்ற சொல் உருவானது என கூறுபவர்
அ) கால்டுவெல் ஆ) ஹுராஸ் பாதிரியார்
இ) பரிதிமாற் கலைஞர் ஈ) ஜி யு போப்

94. 'தாண்டகப் பாடிய ஆழ்வார் ' என அழைக்கப்படுபவர் யார்?
அ) திருமிழிசை ஆழ்வார் ஆ) திருமங்கை ஆழ்வார்
இ) நம்மாழ்வார் ஈ) மதுரகவியாழ்வார்

95. "சங்கம்" பற்றிய தெளிவான வரையறை கூறும் நூல்
அ) தேவாரம் ஆ) சின்னமனூர் செப்பேடு
இ) இறையனார் களவியல் வரை ஈ) மணிமேகலை



Scanned with OKEN Scanner
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

96. "ஓதலின் சிறந்தன்று ஒழுக்கம் உடைமை" எனக் கூறும் நூல் ?
அ) முதுமொழிக்காஞ்சி ஆ) ஏலாதி
இ) முதுரை ஈ) நல்வழி

97. "செய்குன்று" - இலக்கணக்குறிப்பு
அ) இரண்டாம் வேற்றுமைத்தொகை ஆ) வினைத்தொகை
இ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை ஈ) உவமைத்தொகை

98. 'இரத்தினச் சுருக்கம்' எழுதியவர் யார் ?
அ) கம்பர் ஆ) ஒட்டக்கூத்தர்
இ) குணவீரப் பண்டிதர் ஈ) புகழேந்தி புலவர்

99. திருக்குற்றால குறவஞ்சியின் இடம்பெறும் கதைத் தலைவி யார்?
அ) குமுதவல்லி ஆ) வசந்தவல்லி
இ) கனகவல்லி ஈ) பதுமவல்லி

100. எதிர்கால நிகழ்வுகளை முன்கூட்டியே கணித்தவர்
அ) பம்பாட்டுச் சித்தர் ஆ) குதம்பை சித்தர்
இ) குதம்பைச் சித்தர் ஈ) கோரக்கர்

101. 'மானுக்குப் பிணை நின்ற படலம்' இடம் பெறும் நூல் ?
அ) தேம்பாவணி ஆ) சிறாப்புராணம்
இ) முதுமொழி மாலை ஈ) இரட்சணியண் யாத்திரிகம்

102. தலப் புராணங்கள் எத்தனை வகைகளில் அமைந்து வரும்
அ) நான்கு ஆ) ஐந்து
இ) ஆறு ஈ) ஏழு

103. இலக்கிய வளம் இல்லா மொழி எது ?
அ) மலையாளம் ஆ) தெலுங்கு
இ) கன்னடம் ஈ) துளு

104. கூற்று - 1 : எட்டாம் பத்தைப் பாடியவர் பெருங்குன்றூர் கிழார்
கூற்று - 2 : முதல் பத்தைப் பாடியவர் குமட்டூர் கண்ணனார்
அ) கூற்று - 1 கூற்று - 2 இரண்டும் சரி
ஆ) கூற்று - 1 சரி, கூற்று - 2 தவறு
இ) கூற்று - 1 தவறு, கூற்று - 2 சரி,
ஈ) கூற்று - 1 கூற்று - 2 இரண்டும் தவறு

105. மொழியியலை எத்தனை வகைகளாகப் பிரிக்கலாம்
அ) மூன்று ஆ) நான்கு
இ) இரண்டு ஈ) ஒன்று

106. பாடாண் திணையின் துறைகள்
அ) 47 ஆ) 46
இ) 48 ஈ) 49



Scanned with OKEN Scanner
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

107. 'தொண்டகப் பறை' எந்த நிலத்திற்கு உரியது
அ) முல்லை ஆ) பாலை
இ) மருதம் ஈ) குறிஞ்சி

108. "தொண்டைமான் இளந்திரையினோடு" தொடர்புடையது
அ) சிறும்பாணாற்றுப்படை ஆ) பொருநராற்றுப்படை
இ) கூற்றதாற்றுப்படை ஈ) பெரும்பாணாற்றுப்படை

109. "அழுகையின் நிலைகளன்களுள் ஒன்று,
அ) மடன் ஆ) வருத்தம்
இ) இழிவு ஈ) பேதைமை

110. சுஜாதாவின் இயற்பெயர்,
அ) நகுலன் ஆ) இராமச்சந்திரன்
இ) இரங்கராஜன் ஈ) வைத்தியலிங்கம்

111. வீரமாமுனிவரோடு தொடர்பு இல்லாதது எது
அ) பரமார்த்த குருகதை ஆ) வேதியர் ஒழுக்கம்
இ) ஜீவகாருண்ய ஒழுக்கம் ஈ) கொடுந்தமிழ் இலக்கணம்

112. 'நடிப்பிசைப் புலவர்' என்று அழைக்கப்படுபவர் யார்?
அ) பரிதிமாற் கலைஞர் ஆ) டி.கே எஸ் சகோதரர்கள்
இ) கே. ஆர். ராமசாமி ஈ) பாகவதர்

113. 'அடியும் முடியும்' என்ற நூலின் ஆசிரியர் யார்?
அ) க.சிவத்தம்பி ஆ) தா ஏ ஞானமூர்த்தி
இ) க.கைலாசபதி ஈ) தி. சு. நடராஜன்

114. அமெரிக்க இலக்கியங்களை அறிமுகம் செய்தவர் யார்?.
அ) சுந்தர ராமசாமி ஆ) அசோகமித்திரன்
இ) பிரபஞ்சன் ஈ) நாஞ்சில் நாடான்

115. வாணெடுங்கண் பணிகூ' இதில் ஒன்றும் தளை
அ) இயற்சீர் வெண்டளை ஆ) வெண்சீர் வெண்டளை
இ) கலித்தளை ஈ) ஒன்றிய வஞ்சித்தளை

116. 'சால்பு முல்லை' என்பது
அ) மறவனின் சிறப்பு ஆ) படைத்தலைவனின் சிறப்பு
இ) அரசின் திறப்பு ஈ) சான்றோனின் சிறப்பு

117. பொருந்தாததைத் தேர்வு செய்க
அ) விளித்தொடரில் ஒற்று மிகும் ஆ) எழுவாய்த் தொடரில் ஒற்று மிகாது
இ) படி சொல் முன் மிகாது ஈ) உம்மைத்தொகையில் மிகாது



Scanned with OKEN Scanner
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

118. ஐந்திரம் ' எவ்வகை நூல்

அ) தமிழ் மொழி　　ஆ) வடமொழி

இ) சிங்கள மொழி　　ஈ) கன்னட மொழி

119. ஓரெழுத்து ஒரு மொழி சொற்கள் எத்தனை

அ) 42　　ஆ) 41

இ) 40　　ஈ) 43

120. ' பொன்னகரம் ' என்ற சிறுகதையின் ஆசிரியர்

அ) குபரா　　ஆ) புதுமைப்பித்தன்

இ) ஜெயகாந்தன்　　ஈ) ஜானகிராமன்

121. ' எல்லோரும் இன்புற்றிருக்க ' எனக் கூறியவர் யார்

அ) இராமலிங்க அடிகளார்　　ஆ) தாயுமானவர்

இ) பட்டினத்தார்　　ஈ) திருநாவுக்கரசர்

122. பின்னத்தூர் நாராயணசாமி எந்த நூலுக்கு உரை செய்துள்ளார் ?

அ) குறுந்தொகை　　ஆ) அகநானூறு

இ) புறநானூறு　　ஈ) நற்றிணை

123. பொருத்துக

| | | | | | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|---|---|---|---|
| அ) | யவனராணி | 1. ஜெக சிற்பி. | | அ) | 4 | 3 | 2 | 1 |
| ஆ) | முல்லைக் கொடியாள் | 2. ஜானகிராமன் | | ஆ) | 3 | 4 | 2 | 1 |
| இ) | சக்தி வைத்தியம் | 3. விந்தன் | | இ) | 3 | 4 | 1 | 2 |
| ஈ) | மண்ணின் குரல் | 4. சாண்டில்யன் | | ஈ) | 4 | 3 | 1 | 2 |

124. ' மற்றொரு பாரதி பிறந்து விட்டான் ' எனக் கூறப்படுபவர் யார் ?

அ) பாரதிதாசன்　　ஆ) கண்ணதாசன்

இ) வாணிதாசன்　　ஈ) சுரதா

125. தொல்காப்பியர் கூறும் வனப்புகளின் எண்ணிக்கை

அ) 12　　ஆ) 06

இ) 04　　ஈ) 08

126. மதுரைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக பணியாற்றியவர்

அ) தெபொமீ　　ஆ) வ.சுப மாணிக்கம்

இ) எஸ் ராமகிருஷ்ணன்　　ஈ) பண்டிதமணி

127. கால்வெல்லின் ஒப்பிலக்கணக்கத்தைத் தமிழாக்கம் செய்தவர்

அ) கோவிந்தன்　　ஆ) பூர்ணலிங்கம் பிள்ளை

இ) பா.வே மாணிக்க நாயனார்　　ஈ) இராமகிருஷ்ணன்

128. சார்பு எழுத்துக்கள் 9 எனக் கூறும் நூல்

அ) நன்னூல்　　ஆ) பிரயோக விவேகம்

இ) சுவாமிநாதம்　　ஈ) இலக்கண விளக்கம்



Scanned with OKEN Scanner
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

129. தொண்ணூற்றாறு விழுப்புண்களைப் பெற்ற சோழ மன்னன்
அ) கண்டராதித்தன் ஆ) இரண்டாம் நரசிம்மவர்மன்
இ) விசாயலய சோழன் ஈ) ஆதித்ய சோழன்

130. இரட்டைப் பன்மைக்கு எடுத்துக்காட்டு
அ) ஆண்கள் ஆ) இரட்டையர்
இ) ஐவர்கள் ஈ) அனைத்தும்

131. செய்தியின் பகுதிகள் எத்தனை ?
அ) இரண்டு ஆ) மூன்று
இ) ஐந்து ஈ) நான்கு

132. 'எவ்வகை பொருளும் மெய்வகை விளக்கும்' எனக்கூறும் அணி எது?
அ) தன்மையணி ஆ) விசேடவணி
இ) தீவக வணி ஈ) பாவிகவணி

133. திகிழ் + தசக்கரம் இடம்பெறும் நூல்
அ) மேருமலைப் புராணம் ஆ) கந்தபுராணம்
இ) காஞ்சிப்பபுராணம் ஈ) திருவிளையாடற் புராணம்

134. ஆற்றுப்படை நூல்களில் மிகச்சிறிய நூல்
அ) சிறுபாணாற்றுப்படை ஆ) பொருநராற்றுப்படை
இ) கூத்தராற்றுப்படை ஈ) பெரும்பாணாற்றுப்படை

135. கலித்தொகையில் மிகச்சிறிய கலி எது ?
அ) முல்லை ஆ) மருதம்
இ) குறிஞ்சி ஈ) நெய்தல்

136. பத்துப்பாட்டில் மிகச்சிறந்த நூல் எது ?
அ) நெடுநெல் வாடை ஆ) முல்லைப்பாட்டு
இ) மலை படுகடாம் ஈ) சிறுபாணாற்றுப்படை

137. "பெருங்கதை" என்ற நூல் எந்த மொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது
அ) பாரசீக மொழி ஆ) வடமொழி
இ) சிங்கள மொழி ஈ) பைசாச மொழி

138. சிற்றிலக்கியங்களைத் தொல்காப்பியர் எவ்வாறு அழைத்தார்
அ) தோல் ஆ) தொன்மை
இ) அழகு ஈ) விருந்து

139. தமிழில் முதல் முதலில் இலக்கியக் கலை படைத்தவர்
அ) க. கைலாசபதி ஆ) அ.சா.ஞானசம்பந்தன்
இ) வ சுப்பமாணிக்கம் ஈ) தா.ஏ. ஞானமூர்த்தி



Scanned with OKEN Scanner
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

140. "நந்தனார் சரித்திரம்" எழுதியவர் யார்
அ) கோபாலகிருஷ்ண பாரதி ஆ) சுத்தானந்த பாரதி
இ) சோமசுந்தர பாரதி ஈ) சுப்பிரமணிய பாரதி

141. கிரேக்க மொழியை ஆராய்ந்தவர்களுள் ஒருவர்
அ) முரே ஆ) பாப்
இ) வர்ரோ ஈ) அரிஸ்டாட்டில்

142. நம்மாழ்வாரைச் சிறப்பிக்கும் நூல்
அ) வரையறுக்கப்பட்ட பாட்டியல் ஆ) மாறனலங்காரம்
இ) சிதம்பரப்பாட்டியல் ஈ) பிரயோக விவேகம்

143. "மாதேவடிகள்' என்றழைக்கப்படுபவர் யார்?
அ) சேக்கிழார் ஆ) மீனாட்சி சுந்தரனார்
இ) கம்பர் ஈ) உமாபதி சிவாச்சாரியார்

144. முதலாழ்வார் மூவரும் சந்தித்த இடம்
அ) திருக்கோவிலூர் ஆ) சீர்காழி
இ) திருக்காவலூர் ஈ) திரு மயிலாப்பூர்

145. 'நீரளவே ஆகுமாம் நீராம்பல் தான் கற்ற' என இடம் பெறும் நூல்
அ) வாக்குண்டம் ஆ) நல்வழி
இ) கொற்றை வேந்தன் ஈ) ஆத்திச்சூடி

146. திரிகடுகத்தின் ஆசிரியர் யார்
அ) நல்லாதனார் ஆ) விளம்பிகனார்
இ) பூதஞ்சேந்தனார் ஈ) கபிலர்

147. அஃ கஞ்சுருக்கேல் - இதில் இடம் பெறுவது
அ) உணவு ஆ) தாணியம்
இ) அன்பு ஈ) அனைத்தும்

148. ந. பிச்சமூர்த்தியோடு தொடர்புடையது
அ) ஆலபனை ஆ) நரகம்
இ) வழித்துணை ஈ) ஊர்வலம்

149. 'ஆனந்த யாழை மீட்டுகிறாய்' என்ற பாடலுக்குக் கிடைத்த விருது
அ) சாகித்ய அகாதெமி விருது ஆ) திரு. வி . க . விருது
இ) தேசிய விருது ஈ) பிலிம்பேர் விருது

150. 'நல்ல ஒழுக்கலாறு' என அழைக்கப்படும் நூல்
அ) குறுந்தொகை ஆ) நற்றிணை
இ) அகநானூறு ஈ) அனைத்தும்



Scanned with OKEN Scanner
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

151. 'வான் பொய்ப்பினும் தான் பொய்யா ' எனக் கூறப்படும் ஆறு எது ?

அ) வைகை ஆ) காவேரி

இ) தாமிரபரணி ஈ) சேயாறு

152. ராவ் பகதூர் பட்டம் பெற்றவர் யார்

அ) சி . வை தாமோதரன் பிள்ளை ஆ) சுவாமி வி புலானந்தர்

இ) பரிதிமாற் கலைஞர் ஈ) சுந்தரம் பிள்ளை

153. "தமிழ்நாட்டின் தாக்கரே" என அழைக்கப்படுபவர்

அ) மாதவையா ஆ) ஆரணி குப்புசாமி

இ) சேஷய்யங்கார் ஈ) கைலாசபதி

154. ' உரையோடு புணர்ந்த பழமைமேற்றே' என அழைக்கப்படுவது

அ) படிமம் ஆ) குறியீடு

இ) தொன்மம் ஈ) உவமை

155. ரா.பி சேது பிள்ளையின் நடையை வாட்சனின் நடையைப் போன்று உள்ளது எனக் கூறியவர் யார்?

அ) தெ. பொ .மீ ஆ) மு. வ

இ) சோமலே ஈ) டி கே சி

156. ' நடையழகு என்பது ஆசிரியரின் சொத்து ' எனக் கூறியவர்

அ) வ வே சு ஐயர் ஆ) அகிலன்

இ) லா ச ரா ஈ) கு ப ரா

157. 13 முதல் 31 அடி வரை கொண்ட நூல்

அ) நற்றிணை ஆ) அகநானூறு

இ) பரிபாடல் ஈ) புறநானூறு

158. உவமை உருபுகளுள் ஒன்று

அ) பயன் ஆ) பா

இ) கடுப்ப ஈ) போலி

159. ' பள்ளு ' என்பது எவ்வகை உகரம்

அ) குற்றியலுகரம் ஆ) முற்றியலுகரம்

இ) குற்றியலிகரம் ஈ) இடைத் தொடர் குற்றியலுகரம்

160. நல்லாசிரியருக்குரிய உவமைகளுள் ஒன்று

அ) மலை ஆ) மடற்பனை

இ) குடம் ஈ) முடத்தெங்கு

161. உடல் முழுவதும் கண்களை உடையவர் யார்?

அ) கௌதம முனிவர் ஆ) இந்திரன்

இ) மன்மதன் ஈ) பரஞ்சோதியார்



Scanned with OKEN Scanner

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

162. அயோத்தி வரை சென்ற ஆழ்வார் யார்?
அ) நம்மாழ்வார் ஆ) குலசேகர ஆழ்வார்
இ) மதுரகவி ஆழ்வார் ஈ) பெரியாழ்வார்

163. மொழியியல் தொடர்பான ஆராய்ச்சி எந்த நூற்றாண்டில் இருந்து வளர்ச்சி பெற்றது
அ) 20 - ம் நூற்றாண்டு ஆ) 19ஆம் நூற்றாண்டு
இ) 18 ஆம் நூற்றாண்டு ஈ) 17ஆம் நூற்றாண்டு

164. தொல்காப்பியர் பெயரெச்ச வாய்ப்பாடுகளை எத்தனை கூறியுள்ளார்
அ) 3 ஆ) 4
இ) 5 ஈ) 2

165. கீழ்க்கண்டவற்றுள் இசை நூல் எது
அ) பெருநாரை ஆ) செயிற்றியம்
இ) களரியாவிரை ஈ) அனைத்தும்

166. சங்க இலக்கியங்களைப் போல் வேறு எந்த மொழியிலும் இல்லை எனக் கூறியவர்
அ) ஜி யு போப் ஆ) கால்டுவெல்
இ) ஈராஸ் பாதிரியார் ஈ) கமில் சுவலபில்

167. 'கவிராயர்' என்ற பட்டம் பெற்றவர்
அ) கண்ணதாசன் ஆ) உடுமலை நாராயண கவி
இ) மு மேத்தா ஈ) பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

168. 'பத்துத் தாது பொருட்களையும் ஒருங்கே சேர்த்துப் பாடிய படைப்பாளி யார் ?
அ) உமாபதி சிவாச்சாரியார் ஆ) ஒட்டக்கூத்தர்
இ) சேக்கிழார் ஈ) மீனாட்சி சுந்தரம் பிள்ளை

169. "கிருத்துவர் தேவாரம்" - என்றழைக்கப்படுவது எது?
அ) இரட்சணய யாத்திரிகம் ஆ) இரட்சணிய மனோகரம்
இ) இயேசு காவியம் ஈ) தேம்பாவணி

170. "முருக சித்தர்" என்றழைக்கப்படுபவர் யார்?
அ) வள்ளலார் ஆ) தாயுமானவர்
இ) அருணகிரிநாதர் ஈ) பட்டினத்தார்

171. 'ஜி . யு . போப் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த நூல்
அ) இனியவை நாற்பது ஆ) சிலப்பதிகாரம்
இ) இன்னா நாற்பது ஈ) நான்மணிக்கடிகை

172. 'மதுரைத் தமிழ் சங்கம் நிறுவியவர்
அ) பாண்டியத்துரைத் தேவர் ஆ) வச்சிர நந்தி
இ) திராவிட சாஸ்திரி ஈ) பரிதிமாற் கலைஞர்
அ) அ. ஆ சரி ஆ) அ. ஈ சரி இ)
இ. ஆ. ஈ சரி ஈ) அ மட்டும் சரி



Scanned with OKEN Scanner
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

173. 'கையும் காலும் தூக்கத் தூக்கும் ஆடிப்பாவை போல' இடம்பெறும் நூல்
அ) நற்றிணை ஆ) குறுந்தொகை
இ) அகநானூறு ஈ) கலித்தொகை

174. 'சக்தி தாசன்' என்று அழைக்கப்படுபவர் யார்
அ) பாரதிதாசன் ஆ) பாரதியார்
இ) வாணிதாசன் ஈ) சுரதா

175. 'இரவினிலே வாங்கினோம், இன்னும் விடியவில்லை' எனப் பாடியவர்
அ) கலாப்ரியா ஆ) மேத்தா
இ) ஈரோடு தமிழன்பன் ஈ) அரங்கநாதன்

176. 'ராவணன் மாட்சியும் வீழ்ச்சியும்' எழுதியவர் யார்?
அ) அ.சா ஞானசம்பந்தன். ஆ) வ.வே.சு ஐயர்
இ) பாரதி ஈ) அ.சிதம்பரநாதன்

177. 'உ.வே.சா பதிப்பித்த முதல் நூல்
அ) சீவக சிந்தாமணி. ஆ) ஐங்குறுநூறு
இ) நற்றிணை ஈ) குறுந்தொகை

178. நாட்டுப்புறப் பாடல்களின் தன்மையைக் கொண்ட பாடல்கள்
அ) திருநாவுக்கரசர். ஆ) திருஞானசம்பந்தர்
இ) மாணிக்கவாசகர் ஈ) சுந்தரர்

179. விளி வேற்றுமைக்கு உருபுகள் கூறும் இலக்கண நூல்
அ) நன்னூல் ஆ) வீர சோழியம்
இ) தொல்காப்பியம் ஈ) சுவாமிநாதம்

180. திருவாலங்காட்டில் அடியெடுக்க அஞ்சியவர்
அ) திருஞானசம்பந்தர் ஆ) திருநாவுக்கரசர்
இ) காரைக்கால் அம்மையார் ஈ) சுந்தரர்



www.Padasalai.Net
Scanned with OKEN Scanner
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

## PART - A

## TAMIL ELIGIBILITY EXAM

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | | 11. | | 21. | |
| 2. | | 12. | | 22. | |
| 3. | | 13. | | 23. | |
| 4. | | 14. | | 24. | |
| 5. | | 15. | | 25. | |
| 6. | | 16. | | 26. | |
| 7. | | 17. | | 27. | |
| 8. | | 18. | | 28. | |
| 9. | | 19. | | 29. | |
| 10. | | 20. | | 30. | |

## PART - B

# Major Subject

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 31. | | 56. | | 81. | | 106. | | 131. | | 156. | |
| 32. | | 57. | | 82. | | 107. | | 132. | | 157. | |
| 33. | | 58. | | 83. | | 108. | | 133. | | 158. | |
| 34. | | 59. | | 84. | | 109. | | 134. | | 159. | |
| 35. | | 60. | | 85. | | 110. | | 135. | | 160. | |
| 36. | | 61. | | 86. | | 111. | | 136. | | 161. | |
| 37. | | 62. | | 87. | | 112. | | 137. | | 162. | |
| 38. | | 63. | | 88. | | 113. | | 138. | | 163. | |
| 39. | | 64. | | 89. | | 114. | | 139. | | 164. | |
| 40. | | 65. | | 90. | | 115. | | 140. | | 165. | |
| 41. | | 66. | | 91. | | 116. | | 141. | | 166. | |
| 42. | | 67. | | 92. | | 117. | | 142. | | 167. | |
| 43. | | 68. | | 93. | | 118. | | 143. | | 168. | |
| 44. | | 69. | | 94. | | 119. | | 144. | | 169. | |
| 45. | | 70. | | 95. | | 120. | | 145. | | 170. | |
| 46. | | 71. | | 96. | | 121. | | 146. | | 171. | |
| 47. | | 72. | | 97. | | 122. | | 147. | | 172. | |
| 48. | | 73. | | 98. | | 123. | | 148. | | 173. | |
| 49. | | 74. | | 99. | | 124. | | 149. | | 174. | |
| 50. | | 75. | | 100. | | 125. | | 150. | | 175. | |
| 51. | | 76. | | 101. | | 126. | | 151. | | 176. | |
| 52. | | 77. | | 102. | | 127. | | 152. | | 177. | |
| 53. | | 78. | | 103. | | 128. | | 153. | | 178. | |
| 54. | | 79. | | 104. | | 129. | | 154. | | 179. | |
| 55. | | 80. | | 105. | | 130. | | 155. | | 180. | |

AADHITHYA TRB KANCHIPURAM. 9786851468,

Scanned with OKEN Scanner